5. அறிவிப்புகள்.

(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்). சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. மலர்மன்னன், வேண்டாம். நீங்கள் வேறு, மற்ற உறுப்பினர்கள் வேறு. You are an accused in murder case. I remand you.

1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1987) ஆய்விற்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தர்மபுரி மாவட்டம், ஒசூர் பகுதியில் இருக்கின்ற கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வணக்கத்திற்குரிய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு ஆணையைப் பிறப்பித்து அதன் மூலமாக வேகமாக நடவடிக்கையை எடுப்பதற்குரிய ஒரு சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற ஒசூர் என்பது தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கக்கூடிய அளவுக்கு பல்வேறு ஜாதி, இனம், மதம் எல்லாம் ஒன்றுபட்டு வாழக்கூடிய இடமாகவும், தொழில்வளம் பெருகக்கூடிய இடமாகவும் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் வந்துபோகும் அந்த ஊரில் கேளவரப்பள்ளி டேம் கட்டாததால்குடிநீருக்கு அவதிப்படவேண்டியநிலை உருவானதை எண்ணி அவசரமாக தனித்தன்மையோடு, தனிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பார்வைக்கு வந்து, இதற்காகத் தனியாக சட்டமுன்வடிவு கொண்டு வந்து

---

* 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.